

கலைஞர் 100 1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 70 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஐப்பசி 03 – திங்கள்கிழமை 20 அக்டோபர் 2025 – வெளியூர் 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 70 : Thiruvalluvar Year - 2056 - Ayppasi 03 - Monday 20 October 2025 - Dak 16 Pages ₹ 5.00


## வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து

# முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் ஆலோசனை!

## அக். 22–அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெறுகிறது!

**சென்னை, அக். 20 -**

**தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழை தொடங்கி தமிழ்நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. சென்னையிலும் அவ்வப்போது பரவலாக மழை பெய்து வருகிறது.**

**இந்நிலையில் வடகிழக்குப் பருவ மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 22.10.2025 புதன் கிழமை அன்று தலைமைச் செயலகத்தில் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகின்றது.**

இது பற்றிய விவரம் வருமாறு:-

**முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னெச்சரிக்கை நடவடிக்கை!**

வடகிழக்குப்பருவமழைஅக்டோபர் மாதம் தொடங்கும் என்பதினால் கடந்த செப்டம்பர் மாதமே முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசு உயர் அதிகாரிகளுடன் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.

மேலும் சென்னையில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளையும் ஆய்வு செய்து அப்பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

**துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அதிகாரிகளுடன் ஆய்வு!**

அதேபோன்று தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழை அக்டோபர் 16ஆம் தேதியிலிருந்து 18 ஆம் தேதிக்குள் தொடங்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்து இருந்த நிலையில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அதிகாரிகளுடன் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டதுடன், சென்னையில் மழை நீர்வடிகால் அமைக்கும் பணிகளையும் ஆய்வு மேற்கொண்டு அப்பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளை அறிவுறுத்தினார்.



இந்நிலையில் கடந்த 16 ஆம் தேதி அன்று தொடர் மழையால் தமிழ்நாடு முழுவதும் உள்ள நீர் நிலைகளின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது.

வடகிழக்குப் பருவமழை துவங்கி உள்ள நிலையில் தமிழ்நாடு முழுவதும் மழை கொட்டித்தீர்க்கிறது. இதனால் நீர் நிலைகள் வேகமாக நிரம்பி வருகின்றன. காவிரி நீர் பிடிப்பு பகுதிகளில் பெய்த மழையின் காரணமாக ஒகேனக்கல் காவிரி ஆற்றில் தண்ணீர் வரத்து, வினாடிக்கு 8 ஆயிரம் கன அடியிலிருந்து 9 ஆயிரத்து 500 கன அடியாக அதிகரித்துள்ளது.

**அணைகளின் நீர்மட்டம் உயர்வு!**

மேட்டூர் அணைக்கான நீர்வரத்து வினாடிக்கு 9 ஆயிரத்து 26 கன அடியிலிருந்து, 10 ஆயிரத்து 374 கன அடியாக அதிகரித்துள்ளது.

இதனால் அணையின் நீர்மட்டம் 119 அடியை எட்டியுள்ளது. இதேபோல் தேனி மாவட்டத்தில் பெய்து வரும் கன மழை காரணமாக, வைகை அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 5 அடி உயர்ந்துள்ளது. அணையிலிருந்து ஆயிரத்து 349 கனஅடி நீர் வெளியேற்றப்படுவதால், மதுரை, திண்டுக்கல் உள்ளிட்ட ஐந்து மாவட்டங்களுக்கு முதல் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. கனமழையால் முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் 139 அடியை தாண்டியுள்ளதால், கேரளாவிற்கு திறக்கப்படும் உபரிநீர் அளவு 10 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதேபோல் ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 100 அடியை தாண்டியுள்ளது.

இந்திய வானிலை ஆய்வு மையம் நேற்று (19.10.2025) வெளியிட்டுள்ள அறிவிப்பில், தெற்கு அந்தமான் மற்றும் அதனையொட்டிய தென்கிழக்கு வங்கக் கடல் பகுதிகளில் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, வரும் 21ம் தேதி வாக்கில் காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக் கூடும் என்றும், அது மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து, அடுத்த 48 மணி நேரத்தில், தெற்கு வங்கக் கடலின் மத்திய பகுதிகள் மற்றும் அதனை யொட்டிய மேற்கு வங்கக் கடலில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, தமிழ்நாட்டில் கோவை, நீலகிரி, ஈரோடு, திருப்பூர், தேனி, தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய 8 மாவட்டங்களில் கன மழை பெய்ய வாய்ப்புள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், வரும் 22 மற்றும் 23 ஆகிய தேதிகளில், 12 சென்டிமீட்டர் முதல் 20 சென்டிமீட்டர் வரை மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதால், ஆரஞ்சு எச்சரிக்கை விடுத்து இந்திய வானிலை மையம் அறிவித்துள்ளது.

**சென்னை - புறநகர்களில் பரவலாக மழை!**

இதனிடையே, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி மாவட்டங்களில், ஒரு சில இடங்களில் இடி, மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது. அதன்படி சென்னையில், தேனாம்பேட்டை, தி.நகர், அண்ணாசாலை, கோடம்பாக்கம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் விட்டுவிட்டு பரவலாக மழை பெய்து வருகிறது. இதேபோல, தாம்பரம், பல்லாவரம் உள்ளிட்ட சென்னையின் புறநகர் பகுதிகளிலும் தொடர்ந்து பலத்த மழை பெய்து வருகிறது. கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் 13.7 செ.மீ மழை பதிவாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

முன்னதாகவே கடந்த 16ம் தேதியே வடகிழக்குப் பருவ மழை தொடங்கியது. இந்த பருவ மழை டிசம்பர் வரை தமிழகத்தின் தென்கோடி பகுதிகளை தவிர்த்து பிற இடங்களில் இயல்பை விட சற்று அதிகமாக பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக, அக்டோபர் மாதம் வழக்கத்தை விட கூடுதலாக 15 சதவீதம் மழை பொழியும் என்று எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

**முதல்வர் தலைமையில் ஆலோசனைக் கூட்டம்!**

இந்நிலையில், தமிழகம் முழுவதும் மேற்கொள்ளப்படும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை தலைமையில் வரும் 22ம் தேதி ஆலோசனை நடத்த கூட்டம் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில், மழைநீர் தேங்காதவாறு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை தொடர்பாக அதிகாரிகளிடம் முதல்வர் அவர்கள் ஆலோசனை மேற்கொண்டார்.

மேலும், கடந்த காலங்களில் வெள்ளப் பாதிப்பு பகுதிகளை கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட வெள்ள பாதிப்புகளை கருத்தில் கொண்டு அதிகாரிகள் செயல்பட வேண்டும் உள்ளிட்ட அறிவுரைகளும் வழங்கப்படும்.

பருவ மழையால் டெல்டா மாவட்டங்களில் உள்ள நெல் கிடங்கு, கொள்முதல் நிலையங்களில் எந்த வித இடர்பாடும் ஏற்படாத வண்ணம் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் முதல்வர் அவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் விவாதிப்பார் என தெரிகிறது.

---

## கோவை ஜி.டி.நாயுடு

# மேம்பாலத்தில் நவீன கேமராக்கள்!

*கோவை, அக். 20 -*

கோவை - அவிநாசி சாலையில் நிலவும் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் வகையில் மாநில நெடுஞ்சாலைத் துறை சார்பில் உப்பிலிபாளையம் முதல் கோல்டுவின்ஸ் வரை 10.10 கிலோ மீட்டர் தூரத்துக்கு கட்டப்பட்ட மேம்பாலம், கடந்த 9ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மக்கள் பயன்பாட்டுக்கு தொடங்கப் பட்டது.

கோவை மாவட்ட ஆட்சியர் பவன்குமார் கிரியப்பனவர் கூறும்போது, “அவிநாசி சாலை ஜி.டி.நாயுடு மேம்பாலத்தில் இறங்குதளங்களில் ரப்பர் வேகத்தடைகள் அமைக்கப்பட்டுள்ளன. போக்குவரத்து நெரிசலை தவிர்க்க, உப்பிலிபாளையம் ரவுண்டானா அருகே சிக்னல்கள் அமைக்கப் பட்டுள்ளன. மேம்பாலத்தின் மீது பல்வேறு இடங்களில் ‘ஏஐ’ தொழில்நுட்ப வசதியுடன் கூடிய சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட உள்ளன.

இதன் மூலம் அதிவேக வாகன ஓட்டிகள், விதிமீறல் வாகன ஓட்டிகள் கண்டறியப்பட்டு, அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். மேம்பாலத்தில் வாகனங்கள் இறங்கும், ஏறும் இடங்களில் அறிவிப்புப் பலகைகளை, குறிப்பிட்ட தூரத்துக்கு முன்னரே பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது” என்றார்.

---

## முன்னாள் துணைவேந்தரின் இடைநீக்கத்தை ரத்துச் செய்த

# ஆளுநர் ரவியின் உத்தரவு செல்லாது!

## அண்ணா பல்கலைக்கழக சிண்டிகேட் தீர்மானம்!

சென்னை, அக். 20 -

அண்ணா பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் வேல்ராஜின் இடைநீக்கத்தை ரத்து செய்த ஆளுநரின் உத்தரவு செல்லாது என அப்பல்கலைக்கழக சிண்டிகேட் தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தின் துணைவேந்தாராக 2021 ஆம் ஆண்டு வேல்ராஜ் நியமிக்கப்பட்டார்.

வேல்ராஜ் துணைவேந்தராக பதவி வகித்த காலத்தில், அண்ணா பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படுகிற தனியார் கல்லூரிகளுக்கு அங்கீகாரம் வழங்கியதில் முறைகேடு செய்ததாக அவர் மீது புகார் எழுந்தது.

இதுதொடர்பாக வழக்கு விசாரணை நடைபெற்று வந்த நிலையில், ஜூலை 31 அன்று பணி ஓய்வு பெறவிருந்த நாளில் அவர் பணியில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து வேல்ராஜ் பணியிடை நீக்கத்தை ரத்து செய்ய ஆளுநர் உத்தரவிட்டார். இது குறித்து தமிழ்நாடு அரசுக்கு ஆளுநர் கடிதம் அனுப்பினார்.

இந்நிலையில், அண்ணா பல்கலைக்கழக சிண்டிகேட் கூட்டம் நேற்று நடைபெற்றது. அதில், முன்னாள் துணை வேந்தர் வேல்ராஜின் இடைநீக்கத்தை ரத்து செய்த ஆளுநரின் உத்தரவு செல்லாது என அரசுக்கு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தனியார் கல்லூரிகளில் போலி ஆசிரியர் சேர்க்கை குறித்து ஊழல் தடுப்பு போலீசார் நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில், பதிவாளர் உட்பட பல்கலைக்கழகத்தின் 11 அதிகாரிகளை அவர்களின் பதவிகளில் இருந்து விடுவிக்கவும் சிண்டிகேட் பரிந்துரை செய்துள்ளது.

---

## தெற்கு ரயில்வேயில்

# 147 சிறப்பு ரயில்கள் இயக்கம்!

*சென்னை, அக். 20 -*

தெற்கு ரயில்வேயில் அக்.22ம் தேதி வரை 147 சிறப்பு ரயில்கள் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நேற்று மட்டும் 19 சிறப்பு ரயில்கள் இயக்கப்படுகிறது.

பண்டிகை தினத்தை முன்னிட்டு, தெற்கு ரயில்வே சார்பில், அக்.16ம் தேதி முதல் 22ம் தேதி வரை 147 சிறப்பு ரயில்கள் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, கடந்த 16, 17 ஆகிய தேதிகளில் சென்னை, கோவை, திண்டுக்கல், கன்னியாகுமரி உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் இருந்து மொத்தம் 37 சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்டுள்ளன.

18ம் தேதி சென்னை, போத்தனூர், திருச்சி, மதுரை, கோவை உள்ளிட்ட நகரங்களில் இருந்து மொத்தம் 24 சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்டன. நேற்று (19ம் தேதி) 19 சிறப்பு ரயில்கள் இயக்கப்படுகிறது.

இன்று (20ம் தேதி) மதுரை, தூத்துக்குடி, தாம்பரம், மேட்டுப்பாளையம் உள்ளிட்ட ஊர்களில் இருந்து 23 சிறப்பு ரயில்கள் இயக்கப்பட உள்ளன, இதுபோல, 21ம் தேதி 25 சிறப்பு ரயில்களும், 22ம் தேதி 19 சிறப்பு ரயில்களும் இயக்கப்பட உள்ளன.

இத்தகவலை தெற்கு ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.